**செய்திவெளியீடு எண்.29/2017** **நாள்: 05.05.2017**

## லாரிகள் மூலம் குடிநீர் பெற விரும்புவோருக்கு இணைய வழி முன்பதிவு (ஆன்லைன்) மற்றும் ஒருமுகப்படுத்தப்பட்ட (Centralised Booking) முன்பதிவு மூலம் பதிவு செய்யும் வசதி – சென்னைக் குடிநீர் வாரியம் அறிவிப்பு

----

லாரிகள் மூலம் குடிநீர் பெற விரும்பும் பொதுமக்களின் வசதியை கருத்தில் கொண்டு சென்னைக் குடிநீர் வாரியம் இரண்டு புதிய சேவைகளை அறிமுகப்படுத்தி உள்ளது. பொதுமக்கள் இணைய வழி முன்பதிவு **(ஆன்லைன்)** மூலமாகவும் ஒருமுகப்படுத்தப்பட்ட முன்பதிவு **(Centralised Booking)** மூலமாகவும் குடிநீர் லாரிகள் மூலம் தங்களுக்குத் தேவையான குடிநீரைப் பெறுவதற்கு முன் பதிவு செய்துகொள்ளலாம்.

தற்போது சென்னைக் குடிநீர் வாரியம் **6000** லாரி நடைகள் மூலம் குடிநீரை மக்களுக்கு விநியோகம் செய்து வருகிறது. லாரி மூலம் குடிநீர் பெற விரும்பும் பொதுமக்கள் தற்போது தங்கள் குடியிருப்பு பகுதிகளுக்கு உட்பட்ட நீர் நிரப்பு மையங்களில் மட்டுமே பதிவு செய்து குடிநீரை பெற்று வருகின்றனர்.

இந்த முறையை எளிமைபடுத்தும் விதமாக பொதுமக்களின் தேவையை கருத்தில் கொண்டு சென்னைக் குடிநீர் வாரியம் இரண்டு முன்பதிவு வசதிகளை அறிமுகப்படுத்தி உள்ளது.

1) இணைய வழி முன்பதிவு (online booking) பொதுமக்கள் **www.chennaimetrowater.com** என்ற வலை தளத்திற்கு சென்று தங்களுக்குத் தேவையான அளவு குடிநீரை ஆன்லைன் மூலம் முன்பதிவு செய்துகொள்ளலாம். அவ்வாறு முன்பதிவு செய்யும் பொதுமக்களுக்கு குறுந்தகவல் (SMS) வாயிலாக முன்பதிவு செய்வதற்கான உறுதித் தகவல் அனுப்பப்படும். இந்த நடைமுறையில் ஏதேனும் தாமதம் இருப்பின் அதற்கான புகாரையும் இந்த இணைய வழி மூலமாகவே பொதுமக்கள் தெரிவிக்கலாம்.

2) ஒருமுகப்படுத்தப்பட்ட முன்பதிவு (Centralised Booking) குறிப்பிட்ட அல்லது அந்தந்த பகுதிகளுக்கு உட்பட்ட நீர்நிரப்பு மையங்களில் மட்டுமே முன்பதிவு செய்வதற்குப் பதிலாக பொதுமக்கள் **45674567** என்ற எண்ணில் தொடர்பு கொண்டு ஒருமுகப்படுத்தப்பட்ட முன்பதிவு வசதியை (Centralised Booking) பயன்படுத்தி லாரிகள் மூலம் குடிநீர் பெற்றுக் கெள்ளலாம்.

மேற்குறிப்பிட்டுள்ள இந்த இரண்டு சேவைகளும் 08.05.2017முதல் நடைமுறைப்படுத்தப்படும்.

பொதுமக்களின் வசதியை மேம்படுத்தும் நோக்கில் நடைமுறைப்படுத்தப்படும் ஆன்லைன் மற்றும் ஒருமுகப்படுத்தப்பட்ட சேவையால் பதிவுகள் ஒருமுகப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்படுவதோடு "முதலில் பதிவு செய்பவர்களுக்கு முதலில் முன்னுரிமை" அடிப்படையில் எந்தவித தாமதமுன்றி லாரி மூலம் குடிநீர் வழங்குவதற்கும் வழிவகை செய்யப்படுகிறது.

இந்த இரண்டு சேவைகள் அறிமுகப்படுத்தப்பட்டாலும் தற்போது நடைமுறையில் உள்ள அந்தந்த பகுதிகளுக்கு உட்பட்ட நீர் நிரப்பு மையங்களில் தொலைபேசி மூலம் பதிவு செய்யும் நடைமுறையும் தொடர்ந்து செயல்படும்.

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைக் குடிநீர்